[21st October 1964

(உ) ஆம். எஸ். எஸ். எல். ஸி. அரசாங்கத் தேர்விற்கு தனிப் பட்ட முறையில் எழுத விரும்பும் ஆசிரியர்களும், ஆசிரியைகளும் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளையுடையவர்களாயிருந்தால் அவர்கள் எல்லோரும் தனிப்பட்ட முறையில் எஸ்.எஸ்.எல்.ஸி., தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள்.

மேலே சொன்ன (2) இனம் சம்பந்தமாக, குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கிற பெண்கள் மட்டுமே அனுமதிக்கப் படுகிறார்கள்.

சதாசார சமதி, சென்னை.

*42. கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சென்னையிலுள்ள சதாசார சமதி மூலமாக இதுவரை லஞ்ச ஊழல் சம்மந்தமான புகார்கள் எவ்வளவு வந்திருக்கின்றன?

(இ) அவைகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

பதில்.—(அ) ஒன்றுமில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

மகளிர்க்கான கடிகாரம் இணைப்புத் தொழிற்சாலை.

*43. கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப் பாரா—

மகளிர்க்கான பல தொழில் கல்லூரிகளில் கடிகாரம் இணைக்கும் தொழில் கல்வியும் ஒரு பாடமாக அமைதல் வேண்டும் என்று மதிப்பீட்டுக்குழு செய்த பரிந்துரைமீது அரசு எடுத்தி ருக்கும் முடிவு யாது?

பதில்.—இந்திய அரசாங்கத் திட்டத்தில் இத்தகைய பாடமுறை எதுவும் சேர்க்கப்படவில்லை. இப் பாடமுறையை ஆரம்பிக்க முடியுமா என்பது தக்க சமயத்தில் பரிசீலிக்கப்படும்.

பொறியியல் துறையில் பகுதிநேரப் பட்டப்படிப்பு

*44. கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: திரு. மு. கருணாநிதி: } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா?

தொழில் துறையில் பணிபுரிபவர் வேலையில் இருந்து கொண்டே மேலும் உயர்ந்த பட்டங்களைப் பெறுவதற்கு வாய்ப் பளிக்கும் வகையில் வகுப்புக்களைத் துவக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? ஆமெனில், எந்த ஆண்டு முதல்?

பதில்.—என்ஜினியரிங் டிப்ளமோ தேர்ச்சி பெற்றவர்களுக்காக பகுதிநேரப் பட்டப்படிப்பு வகுப்புகளைத் தொடங்குவதற்கான விரிவான திட்டத்தையும் பாடத்திட்டங்களையும் தயாரிக்க

21st October 1964]

சர்க்கார் ஒரு குழு அமைத்துள்ளனர். இக் குழுவின் அறிக்கை வந்தவுடன் மேற்படி திட்டம் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்படும்.

Electrification of villages.

* 45 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total number of villages electrified as on 31st December 1963 in the State; and

(*b*) whether it is proposed to complete rural electrification to cover all the villages in the State, before the end of the Third Plan Period?

A.—(*a*) 16,486 towns, villages and hamlets in the States heva been electrified up to 31st December 1963.

(*b*) All villages with a population of 5,00 and above and most of the villages with a population of 2,000 and above would be covered by the end of the Third Plan period.

டால்மியா சிமெண்டுத் தொழிற்சாலையில் வெடி விபத்து

46. கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருச்சி டால்மியா சிமெண்ட் தொழிற்சாலையின் ஜிப்ஸம் சுரங்கத்தில் 1964 மார்ச் மாதம் வெடி விபத்து ஏதேனும் ஏற்பட்டதா?

(இ) ஆமெனில் அதன் காரணமாக எத்தனை பேர் உயிர் இழந்தனர்?

பதில்: (அ) & (இ) ஆம். 2—3—64 பிற்பகல் 12-30 மணிக்கு கள்ளக்குடி கிராமம், டால்மியாபுரத்தில், டால்மியா சிமென்ட் லிமிட்டெட்டில், சுண்ணாம்புக்கல் வெட்டியெடுக்கும் இடத்திற் கருகில் வெடி விபத்து ஒன்று ஏற்பட்டது. இந்த விபத்தில் மூவர் உயிர் இழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலக்கடலை சாகுபடியை அதிகரித்தல்

* 47 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் 1964-65க்கு நிலக்கடலை சாகு படியை அதிகரிக்கும் திட்டத்தை அமலாக்க எந்தெந்த இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன?

(இ) மேற்படி இடங்களில் அதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?